OS.46/2023

நாள். 07.08.2025.

வா.சா.1 – ரமேஷ்

<u>12 முதல் 14 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

வழக்கில் 12ம் அயிட்டமாக காண்பிக்கப்பட்ட சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது பாட்டி காமாட்சி அம்மாளுக்கு பாத்தியப்பட்டது. அவருக்கு எப்படி பாத்தியம் என்றால் அவரது தகப்பனாரான பொன்னையா வழியில் கிடைத்த சொத்து . பொன்னையா பெயரில் பட்டா இருந்ததா / உள்ளதா என்றால் தெரியாது. பொன்னையாவுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காமாட்சி அம்மாள் பெயரில் 12ம் அயிட்ட சொத்துக்கு பட்டா உள்ளதா என்றால் உள்ளது– அந்த பட்டாவை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாகசௌந்தரம்மாள் பெயரில் 12ம் அயிட்டசொத்துக்கு பட்டா இருந்ததா என்றால் இருந்தது. நாகசௌந்தரம்மாள் குப்புச்சாமிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தில் 12ம் அயிட்ட சொத்தை கிரையம் கொடுத்துள்ளரா என்றால் இல்லை. எனது பாட்டி காமாட்சி அம்மாள் குப்புசாமியிடமிருந்து கிரையம் பெற்றபோது கிரையப்பத்திரத்தில் 12ம் அயிட்ட சொத்து காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 12ம் அயிட்ட சொத்துக்கு தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. பாட்டி காமாட்சியம்மாள் மற்றும் அத்தை பூமயில் எழுதிக்கொடுத்த உயிலில் 12ம் அயிட்ட சொத்து சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். எனது பாட்டி காமாட்சி அம்மாள் எழுதி வைத்த உயிலை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. எனது பாட்டி காமாட்சி அம்மாள் 1995ம் ஆண்டில் எழுதி வைத்த உயிலில் 1952ம் ஆண்டு எழுதி வைத்த உயிலை ரத்து செய்துவிட்டதாக சொல்லியுள்ளார் என்றால் தெரியாது. வழக்கு 12ம் அயிட்ட சொத்து என் பாட்டி காமாட்சி அம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றும், அந்த சொத்தை தவறுதலாக வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால்

சரியல்ல. எனது பாட்டி காமாட்சி அம்மாள் மற்றும் பூமயில் எழுதி வைத்த உயிலின்படி 12 முதல் 14 பிரதிவாதிகள் வழக்கு சொத்துக்கள் அனைத்தையும் அடைந்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதிகளுக்கோ, 1 முதல் 11 பிரதிவாதிகளுக்கோ வழக்கு சொத்துக்களில் எந்த உரிமையும், அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல. என் பாட்டி காமாட்சி அம்மாளுக்கு வாரிசு சான்றிதழ் பெற்றுள்ளோமா என்றால் பெற்றுள்ளோம். அசல் வாரிசு சான்றிதழ் யாரிடம் உள்ளது என்றால் எங்களிடம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் வாரிசு சான்றிதழ் பெற்றோம். பாட்டி காமாட்சி அம்மாளுக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு யார் மனு கொடுத்தது என்றால் நான்தான். அந்த மனுவின் நகல் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. நான் மனுவில் சொல்லியுள்ள விவரப்படி தான் வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாரிசு சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன்பு வேலுச்சாமியின் 2வது மனைவி கலா மற்றும்அவரது பிள்ளைகளை விஏஓ உள்ளிட்ட வருவாய் துறை அதிகாரிகள் விசாரித்தார்களா என்றால் தெரியாது. நான் மனுவில் எனது பாட்டி காமாட்சி அம்மாளுக்கு யார் வாரிசு என காண்பித்துள்ளேன் என்றால் என் அப்பா வேலுச்சாமி மற்றும் அத்தை பூமயிலை காண்பித்துள்ளேன். என் அப்பா வேலுச்சாமி இறந்த பிறகு வாரிசு சான்றிதழ் கேட்டு மனுதாக்கல் செய்தேனா என்றால் செய்தேன். வருவாய்துறையினர் விசாரித்து என் அம்மா மற்றும் என்னையும், என் அக்கா லதா, 12ம் பிரதிவாதி கலா, 13, 14 பிரதிவாதிகளான சுகன்யா, முகேஷ்கண்ணன் ஆகியோர்களை வாரிசுகள் என வாரிசு சான்றிதழ் வழங்கியுள்ளார்கள் என்றால் 12ம் பிரதிவாதியை மட்டும் காண்பிக்கவில்லை என கூறிவிட்டு சாட்சி தற்போது விண்ணப்பித்தபோது ஆட்சேபனை இருந்ததால் இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கிறார். நாங்களும், 1 முதல் 11 பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவம் செய்து வருவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் அப்பா இறப்பிற்கு பிறகு வாதிகளாகிய நாங்களும், 1 முதல் 11

பிரதிவாதிகளும் வழக்கு சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் அப்பா உயிருடன் இருந்த காலத்திலேயே எங்களுக்கு உரிமை உள்ளது என இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வேலுச்சாமியின் வாரிசு என்ற அடிப்படையில் வழக்கு சொத்துக்களை நாங்கள் அடைந்து அனுபவித்து வருவதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.